


Signature valid Signature valid

# நகர் ஊரமைப்புத் துறை (DTCP)

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

## சிவன்மலை ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், சிவன்மலை கிராமம் மற்றும் ஊராட்சி , ரீ.ச.எண் :871 / 1B1A1A - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

**( திட்டமில்லாத பகுதி )**

| | | |
|---|---|---|
| அளவு : 1:400<br>[ 1செ.மீ = 4.0 மீ ] | இணையதள விண்ணப்ப எண்: R11YUHUM<br>நாள் : 31.05.2025 | N |

**குறிப்பு :**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : | 5132.00 ச.மீ |
| ஒதுக்கிய மனைகள் | : | 14 |
| மனைப்பிரிவு எல்லை | : | |
| நிலையிலுள்ள சாலை | : | |

**பொதுஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை) :**

I. மனைப்பிரிவு சாலை மற்றும்
மூலை முடக்குகளின் பரப்பு : 1977.79 ச.மீ

**II. பூங்கா :**

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (5132.00 - 1977.79) x(10/100) = 315.42 ச.மீ (10.00 %)

ii) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்புக்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகை ரூ.2,05,023/- , நாள் : 26.06.2025 அன்று மனுதாரர் உரிய அரசு வங்கி கணக்கில் செலுத்தியுள்ளார்.

**III. பொது உபயோகம்**

A) LOCAL BODY- க்கு

ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (5132- 1977.79)x(0.5/100) =15.77 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 18.0 ச.மீ (0.57%)

B) TANGEDCO-க்கு

ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (5132- 1975.54)x(0.5/100) =15.77 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 23.82 ச.மீ (0.75%)

கட்டிட வரம்பு:

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 12.0மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ-ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு:

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீx1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
12.0மீ முதல் 30.50 மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீx4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 04.02.2019, மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.31.01.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020-ன் படி உத்தேச மனைப்பிரிவில் தார் சாலை வசதி, மழை நீர்வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதி மற்றும் தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கேற்ப மனுதாரரால் மனைப்பிரிவில் அமைக்கப்பட்டதினை உள்ளாட்சி உறுதிசெய்த பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், காங்கயம் ஒன்றியம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 0.6மீx1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
8. மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த அழுத்த மின்கம்பி பாதையினை சாலையின் போக்கிற்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO.: 117 / 2025**

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.